Register No. [ ]

**FAXC** **5608-23**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Five – year Regular Course)

Fifth Year – Tenth Semester

# HUMAN RIGHTS LAW

Time : 2 ½ hours Maximum : 70 marks

## PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following is about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Examine the provisions dealing with human rights under the Charter of United Nations.

   ஐக்கிய நாடுகளின் சாசனத்தின் கீழ் மனித உரிமைகள் குறித்து கூறப்பட்டுள்ள வகையங்களை ஆராய்க.

2. Discuss in detail the rights provided to children under the Convention on Rights of Child, 1989.

   1989-ம் வருடத்திய குழந்தைகள் உரிமைகள் உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள குழந்தைகளின் உரிமைகளை விரிவாக விவாதிக்க.

3. Discuss the role of the Supreme Court in incorporating international human rights in Indian legal system.

   சர்வதேச மனித உரிமைகளை இந்தியாவின் சட்ட அமைப்புக்குள் கொண்டுவந்ததற்கான உச்ச நீதிமன்றத்தின் பங்களிப்பை விவாதிக்க.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the significance of Protection of Human Rights Act, 1993.

   1993-ம் வருடத்திய மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் சிறப்பை விவாதிக்க.

5. Explain the role of N.G.Os in the field of safeguarding human rights in India.

இந்தியாவில் மனித உரிமைகளை பாதுகாக்க அரசு சாரா அமைப்புகளின் பங்களிப்பை விவரிக்கவும்.

6. Discuss the powers and functions of National Commission for Women.

தேசிய பெண்கள் ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவாதிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Legal status of refugees in India.

இந்தியாவில் நாடற்றவர்களின் சட்ட நிலை.

(b) Prisoners of war.

போர் கைதி.

(c) Right to Education.

கல்வி கற்கும் உரிமை.

(d) Maneka Gandhi v. Union of India (AIR 1978 SC 597).

மேனகா காந்தி - எதிர் - இந்திய ஒன்றியம் (AIR 1978 SC 597).

(e) The Social Contract theory.

சமூக ஒப்பந்த கொள்கை.

(f) Hard Law principles of Human Rights Law.

மனித உரிமைச் சட்டத்தில் கடின சட்ட விதி.

(g) International Labour Organisation.

சர்வதேச தொழிலாளர் ஒருங்கிணைப்பு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' owed Rs. 10,000/- to 'B'. 'B' filed a suit and got decree in his favour because 'A' failed to pay the amount. 'B' executes the decree against 'A' seeking arrest and detention in civil prison when he did not have means to lead life. In such circumstances, can 'B' seek arrest and detention against 'A'. If yes, whether it amounts to violation of human rights? Decide with decided case laws.

'ஆ' விடம் 'அ' ரூ.10,000 கடன்பட்டவர் ஆவார். கடனை திருப்பிக் கொடுக்காததால் 'ஆ' நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து 'அ'க்கு எதிராக தீர்பாணைப் பெற்றார். அத்தீர்பாணையை நிறைவேற்றம் செய்யும் பொருட்டு 'அ'வை கைது செய்து உரிமையியல் சிறையில் அடைக்க 'ஆ' கோருகிறார். அப்பொழுது 'அ' தனது வாழ்வாதாரத்திற்கு தேவையான பொருள் இன்றி இருக்கிறார். இவ்வாறு 'அ' இருக்கும் சூழ்நிலையில் 'ஆ' வானவர் 'அ'வை கைது செய்து உரிமையியல் சிறையில் அடைக்க கோரமுடியுமா? அவ்வாறு முடியும் எனில் இது ஒரு மனித உரிமை மீறலாகுமா? என்பதை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் தீர்க்க.



9. Columbana government has appointed workers on daily wage basis for laying grounds for conducting olympic games in the country. But the Columbana government has miserably failed to pay minimum wages to workers. The NGO knowing about this, filed a case against government in the Supreme Court saying that failure to pay minimum wage amounts to violation of basic human rights. Can NGO win the case? Decide with decided case laws.

கொழும்பானா அரசானது சர்வதேச ஒலிம்பிக் போட்டியை அந்நாட்டில் நடத்துவதற்கு தேவையான மைதானங்களை அமைப்பதற்கு தினக்கூலி அடிப்படையில் பணியாட்களை நியமித்தது. ஆனால் அவர்களுக்கு குறைந்தபட்ச கூலியை வழங்கவில்லை. இதையறிந்த தன்னார்வ அமைப்பானது உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து குறைந்தபட்ச கூலியைக் கொடுக்காதது மனித உரிமையை மீறியச் செயலாகும் என வாதிட்டது. தன்னார்வ அமைப்பு இவ்வழக்கில் வெற்றி பெறுமா? என்பதை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் தீர்க.

10. 'X' leads life with wife and children after acquittal in various cases like murder and dacoity. The District Superintendent of Police has created a history sheet and directed subordinate officers to keep in surveillance. In such circumstances 'X' has filed a case against this order saying that 'X' has been followed and knocking the house while sleeping at night to find out whether 'X' is in house or not? Further 'X' asserted that it amounts to violation of Art 21 of the Constitution. Can 'X' succeed in the case? Decide with decided case laws.

'X' என்பவர் பல்வேறு கொலை மற்றும் கொள்ளைச் செயல்களில் ஈடுபட்டு விடுதலைக்குப் பின் மனைவி மற்றும் குழந்தைகளுடன் அமைதியான முறையில் வாழ்ந்து வருகிறார். இந்நிலையில் மாவட்ட கண்காணிப்பாளர் அவர் மீது குற்றப்பதிவேடு ஏற்படுத்தி இரவில் வீட்டிலுள்ளாரா என்பதை கண்காணிக்க கீழமை அலுவலர்களுக்கு உத்தரவு பிறப்பித்தார். இவ்வுத்தரவை 'X' என்பவர் வழக்குத் தாக்கல் செய்து இவ்வாறு 'X'யை நோட்டமிடுவது மற்றும் இரவில் வீட்டில் உள்ளாரா இல்லையா என்பதை கண்காணிப்பது மற்றும் தூக்கத்தில் உள்ளவரை எழுப்புவது அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஷரத்து 21-வுள்ள உரிமையை மீறியச் செயலாகும் என வாதிடுகிறார். இவ்வழக்கில் 'X' வெற்றிபெறுவாரா? என்பதை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் தீர்மானிக்க.